# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண்.283/2015

பி.வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 26–11–2025.

பெயர் = ராமசாமி பி.வா.சா.1

பி.வா.சா.1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் கு.வி.–

(1) நீதிமன்ற உத்தரவின்படி இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ள 5 முதல் 269 பிரதிவாதிகள் நீதிமன்றத்திற்கு இதுவரையில் வந்தது கிடையாது என்றால் சரிதான் அவர்களுக்காகத்தான் நான் வந்துள்ளேன் என சாட்சி கூறுகிறார். 5 முதல் 269 பிரதிவாதிகளில் யாருமே எனக்கு ஆதரவாக இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதிகளில் யாரையாவது நீதிமன்றத்திற்கு அழைத்து விசாரிக்க முடியுமா என்றால் முடியாது. ஆட்சேபணை மனுவை வக்கீல் வைத்து நான் தான் தாக்கல் செய்தேனா என்றால் உறவின்முறையிலிருந்து தயார் செய்துபோட்டோம் என சாட்சி கூறுகிறார். அந்த கையெழுத்துக்கள் எல்லாம் கற்பனையாக நாங்கள் போட்டுக்கொண்டது என்றால் சரியல்ல. 08.11.2015 ல் தாவா இடத்தில் திருமணமண்டபம் கட்டுவதற்காக வாஸ்து செய்தோமா என்றால் எனக்கு ஞாபகமில்லை என சாட்சி கூறுகிறார். உறவின்முறையில் எந்த தேதியில் வாஸ்து செய்தோம், தினமும் எவ்வளவு செலவு செய்கிறோம் என எழுதிவைத்திருப்பார்கள் என்றால் சரிதான். வாஸ்து செய்து எத்தனை நாட்கள் கழித்து குழி வெட்டினோம் என்றால் வாஸ்து செய்வதற்கு முன்பாகவே குழி வெட்டிவிட்டோம் என சாட்சி கூறுகிறார்.

(2) எந்த தேதியில் குழி வெட்டினோம் என்றால் 25.09.2024 ல் குழி வெட்டினோம். திருமணமண்டபம் கட்டுவதற்கு ஊராட்சி மன்றத்தில் அனுமதி வாங்கினோமா என்றால் திருமணமண்டபம் கட்டவில்லை உறவின்முறை கட்டிடம் தான் கட்டினோம். அதற்கு அனுமதி வாங்கினோமா என்றால் இல்லை. என்னுடைய எதிர்வழக்குரை பாரா–2 ல் நாங்கள் கட்டியுள்ள கட்டிடம் திருமணமண்டபம் என சொல்லிவிட்டு தற்போது உறவின்முறை கட்டிடம் என சாட்சியமளிக்கிறேன் என்றால் எதிர்வழக்குரையில் அவ்வாறு சொல்லியிருப்பார்கள் என சாட்சி கூறுகிறார். திருமணமண்டபம் கட்டுவதற்கு மாவட்ட ஆட்சியரின் அனுமதி

பெற வேண்டும் என்றால் எனக்குத் தெரியாது. திருமணமண்டபம் கட்டுவதற்கு பார்க்கிங் வசதி ஏற்படுத்த வேண்டும் என்ற விதி உள்ளது என்பது தெரியுமா என்றால் தெரியும். மண்டபத்திற்கு வடக்குபக்கம் பார்க்கிங் வசதி போட்டுள்ளோம் என சாட்சி கூறுகிறார். தென்வடல் 20 அடி கிழமேல் 135 அடி இடம் விட்டுள்ளோம் என சாட்சி கூறுகிறார். வடக்கு பக்கம் ஓடை உள்ளதா என்றால் ஆமாம். தாவா இடத்தில் திருமணமண்டபம் கட்டுவதற்காக தீர்மானம் போட்டுள்ளோம் என்றால் சரிதான்.

வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S